# கிரமிப்பை ஆதரிக்கும்
# யவெறிப் பத்திரிக்கைகள்

லங்கை விவகாரத்தில்
கைவரிசை இருக்கிறதா என்
கை என்றும் புலனாய்வுப்
கண்டுபிடிக்க வேண்டும்''
நம் பிரதமர் ராஜீவ் கேட்டுக்

அவருடைய வழக்கமான
ன்றாகத்தான் இருக்கும். இந்
வனமான 'ரா'விடம் ஒப்ப
இரகசியத் துப்பறிவுப்
பரம எதிரிகளான பத்திரிக்
செய்யுமாறு பகிரங்கமாகக்
ராஜீவ்?' என்று யாரும் எண்
டாம். உள்நாட்டு விவகாரங்
ருத்தவரை பத்திரிகைகளும்
தான் பாம்பும் கீரியுமாக
அண்டை நாடுகளின் மீது
கிரமிப்பு - விரிவாக்க நோக்
க்கமாகவே இருக்கிறார்கள்.
தேசியவெறி புரையோடிப்
எனவே தான் 'இப்போது
கிளம்பியிருக்கும் இந்திய
க்குப் பின்னணி நமது பகை
தூண்டுதல் இருப்பதாக' பிரச்
க்கி விடுங்கள், என்பதுதான்
ரிக்கை!

தேசிய ஏடுகள் என்று சொல்
ஆங்கிலப் பத்திரிக்கைகள்,
பினர் உட்பட நாட்டின் எந்த
யம்விட அதிகமான அளவு
உண்மை விவரங்களும், இரக
அறிந்தவை. ஆனால் அவற்
வியாபார அவசியத்துக்கேற்ப
பிடுகின்றன. தேசிய வெறி
பெரும்பாலானவற்றைத் திரித்
ப்புச் செய்தும் திசை திருப்பி
இலங்கை - ஈழ விவகாரம்
நல்ல சான்று!

**டுகள்: ஆரம்பத்திலிருந்தே**
**திர்ப்பு - தேசிய வெறி!**

தமிழினப் படுகொலையைத்
தமிழகமே கொதித்தெழுந்தது!
முடங்கிக் கிடந்ததுகளும், சுயந
உருவங்களும் கூட ஆத்திர
மும் காட்டினர்! அந்தச் சில
சிங்கள இனவெறியர்களின்
தாக்குதலுக்கு எதிராக, ஈழத்
ஆதரவாக எல்லா ஏடுக
கண்ணீர் வடித்தன. இலங்கை
யெடுத்து ஈழத்தமிழர்களைக்
வேண்டும் என்ற திராவிடக் கட்சி
கையைப் பல 'தமிழர் - இன'
த்தன. 'என்னவானாலும் அது
விவகாரம், இந்தியா தலையிடக்
'பார்ப்பனிய - தேசிய' ஏடு
ஆங்கில ஏடுகள் அனைத்
அது அவர்களுடைய சொந்
யல்ல. ஏனெனில் பின்னால்

ராஜீவ் படையெடுத்தபோது அவர்கள் எதிர்க்கவில்லை; ஆதரித்தனர்.

அதுமட்டுமல்ல, இலங்கை - ஈழப்பிரச்சினையில் தலையிடுவதற்கான இரகசியத் தயாரிப்புகளில் ராஜீவ் கும்பல் ஈடுபட்டிருந்ததும் அந்த ஏடுகளுக்குத் தெரியும். தனது பிராந்திய ஆதிக்க, ஆக்கிரமிப்பு, விரிவாக்க நோக்கங்களோடு பல திட்டமிட்ட சதி வேலைகளில் இந்திய அரசு இறங்கியது. தனது உளவுப் படையான 'ரா' மூலம் ஈழப் போராளி அமைப்புகளுக்குள் ஊடுருவித் தனது கைக்கூலிகளை உருவாக்கியது. போராளி அமைப்புகளுக்குப் பயிற்சியும் ஆயுதங்களும் கொடுத்து சிங்கள சிவிலியன்களைப் படுகொலை செய்யும்படி ஏவியது. போராளிகளையே பிளவுபடுத்தி ஒருவரை ஒருவர் கொன்றொழிக்கும்படி செய்தது. ஜெயவர்த்தனே கும்பலுடன் சேர்ந்து கொண்டு இரகசிய பேரங்கள் நடத்தி ஈழத்தில் ஒரு பொம்மை அரசை நிறுவுவதற்கான சதியில் ஈடுபட்டது.

இவை அனைத்தும் பற்றிய இரகசியங்களை முழுவதுமாக அறிந்திருந்தும் முதலாளித்துவ ஏடுகள் அனைத்தும் இருட்டடிப்புச் செய்தன. அதே சமயம் ஈழப்போராளி அமைப்புகளின்மீது தமிழகத்து மக்களுக்குள்ள ஆதரவு, அபிமானத்தை நீக்கி அவற்றைத் தனிமைப்படுத்தும் நோக்கத்தோடு ஈழப்போராளிகளுக்கு எதிரான அவதூறுப் பிரச்சாரங்களைச் செய்தன. சிங்கள இனவெறியன் ஜெயவர்த்தனேயின் பேட்டி உட்பட ஈழவிடுதலைக்கு எதிரான கருத்துக்களைப் பரப்பின; தமிழில் துக்ளக்கும், ஆங்கிலத்தில் இந்துவும் இந்த இயக்கத்துக்குத் தலைமையேற்றன.

தெற்கு ஆசிய பிராந்தியத்தின் நாட்டாண்மைக்காரனாகி ஜெயவர்த்தனே கும்பலுக்கும் - ஈழப்போராளிகளுக்கும் இடையே பஞ்சாயத்துக்கள் - பேரங்கள் நடத்தும்போது ஈழப்போராளிகளை உருட்டி மிரட்டியது; சிறைப்பிடித்துத் துன்புறுத்தியது; ஆயுதங்கள் - தளவாடங்கள் அனைத்தையும் பறிமுதல் செய்தது - ஆகிய பாசிச ராஜீவ் கும்பலின் அடாவடித்தனங்களை எந்த முதலாளித்துவ ஏடும் எதிர்க்கவில்லை. இவற்றிலெல்லாம் தமிழகப் போலீசின் திறமையையும் ராஜீவின் துணிச்சலையும் பாராட்டின.

அதன்பிறகு, ராஜீவ் - ஜெயவர்த்தனே துரோக ஒப்பந்தம் வந்தது. மற்ற பிற ஈழப் போராளி அமைப்புகளை மிரட்டியும், விலைபேசியும் வளைத்துப்போட்டது, ராஜீவ் கும்பல். ஆனால் புலிகளுடன் நடத்திய பேரங்கள் தோற்றுப் போகவே ஈழ ஆக்கிரமிப்புப் போரைத் தொடுத்துத் தொடர்ந்து நடத்துகிறது. சிங்கள இனவெறி ராணுவம் நடத்திய அக்கிரமங்களை விஞ்சிவிடும் அளவு ஈழத்தமிழர்களுக்கு எதிராகப் படுகொலைகள், கற்பழிப்பு, சித்திரவதை, சூறையாடல்களைத் தொடர்கிறது, இந்திய ஆக்கிரமிப்புப்படை. ஈழத்தில் ஒரு மோசடித் தேர்தலை நடத்தி துரோகிகளின் பொம்மை அரசை நிறுவியது.

இவை அனைத்தும் பற்றிய உண்மை விவரங்களை அரசு அதிகாரிகளுடன் உள்ள நெருக்கமான உறவுகள்; தமது சொந்த நிருபர்கள் அனுப்பும் தகவல்கள் ஆகியவை மூலம் முதலாளித்துவ ஏடுகள், குறிப்பாக ஆங்கில ஏடுகள் நன்றாகவே தெரிந்திருந்தன. இருந்தும் பாசிச ராஜீவ் கும்பலின் ஆக்




''யானை''யை எதிர்க்க என்ன துணிவு வேண்டும் என்பதாக - தி வீக்

கிரமிப்பு - ஆதிக்கப்போரை அவை ஆதரிக்கின்றன. இந்திய இராணுவத்தின் அட்டூழியங்கள் - இழப்புகள்; அதற்கு எதிராக இலங்கை மக்கள், குறிப்பாக ஈழத்தமிழர்களின் வெறுப்பு; புலிகளுக்கு ஈழத் தமிழர்களிடையே உள்ள ஆதரவு; இலங்கை அரசே சிங்கள மக்களிடமிருந்து தனிமைப்பட்டுப் போயிருப்பது - ஆகிய செய்திகளை இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபர் ரிட்டா செபஸ்தியன், டெலிகிராப் நிருபர் சங்கர்சன் தாகூர், இந்து நிருபர் ஜெயராஜ், ட் நிருபர் வெங்கிடராமன் போன்றவர்கள் எழுதுகிறார்கள்.

இருந்த போதும், தலையங்கங்கள், சிறப்புக் கட்டுரைகள் மூலம் நேரெதிரான கருத்துக்களைப் பரப்புகின்றனர். ஆரம்பத்தில் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு, பிறகு அதைவிட்டு வன்முறைப் பாதையைப் புலிகள் மேற்கொண்டதாகவும், ஈழத்தமிழர்களிடம் ஆதரவின்றி மிரட்டிக் காரியங்களைப் புலிகள் சாதித்துக் கொள்கிறார்கள்; ஏறக்குறைய புலிகள் ஒழிக்கப்பட்டு விட்டார்கள் என்றும் செய்திகள் தருகிறார்கள்.


''இந்தியாவின் பிராந்திய நலன்களுக்காகவும் இலங்கையின் ஒருமைப்பாடு ஐக்கியத்துக்காகவும் இந்திய அரசு மேற்கொண்டுள்ளவை அவசியமான நடவடிக்கைகள்'' என்பதாக ஆங்கில ஏடுகள் பகிரங்கமாகவே எழுதின. பலம் வாய்ந்த இந்தியா இந்தப் பிராந்தியத்தின் மீது ஆதிக்கம் செலுத்த முயலுவது இயல்பானது, நியாயமானதுதான்; ஆனால் அதை இன்னும் திறமையாக ராஜீவ் செய்ய வேண்டும். வியத்நாமில் அமெரிக்காவும் ஆஃப்கானில் ருஷ்யாவும் செய்ததைப்போல் சிக்கிக் கொள்ளக்கூடாது என்று எச்சரித்து உபதேசிக்கும் வகையிலேதான் எழுதின. யாழ்ப்போரும், இந்திய இராணுவ இழப்புகளையும் கண்டபிறகு 'புலிகளின் ஒப்புதலின்றி ஒப்பந்தம் போட்டு, இலங்கைக்கு படையனுப்பியது குறித்து' ஓரிரு ஏடுகள் மட்டும் சந்தேகம் தெரிவித்தன. மற்றபடி இந்தப் பிராந்தியத்தின் போலீசுக்காரனாக - துணை வல்லரசாக இந்தியா வளர்ந்து விட்டது என்று ஏகாதிபத்திய ஏடுகள் எழுதிய பிறகு அதையும் பெருமைக்குரியதாகவே சித்தரித்தன. சர்வ தேசிய ரீதியில் இந்தியாவின் வல்லமையை ஒப்பிட்டு ஆய்வுக் கட்டுரைகள் எழுதின.

இப்போது புலிகள் - பிரேமதாசா பேச்சு வார்த்தை தொடங்கி, இந்திய இராணுவத்தை வெளியேற்றும் நிர்பந்தம் எழுந்த பிறகு அந்த ஆங்கில - தேசிய ஏடுகள் மேலும் அப்பட்டமாகத் தமது தேசிய வெறியைக் காட்டுகின்றன. சில ஏடுகளைச் சான்றாகப் பார்ப்போம்:

### இந்தியன் எக்ஸ்பிரசு - அருண்சோரிக்கு, உள்நாட்டில் நாணயமற்ற ராஜீவ் அண்டை நாட்டின் நியாயவானாம்!

பாசிச ராஜீவுக்கு எதிராக 'தர்மயுத்தம்' நடத்தும் இந்தியன் எக்ஸ்பிரஸ் - அதன் புலனாய்வுப் புலி அருண்சோரியின் யோக்கியதையைப் பாருங்கள்! உள்நாட்டு விவகாரங்களைப் பற்றி எழுதும்போது, ''இவ்வளவு நாணயமற்ற ராஜீவ் நமது நாட்டின் சார்பாக பீகிங்கில் எல்லைப்பிரச்சினை பற்றியும், கொழும்பில் இராணுவத் தலையீடு பற்றியும் பேசி முடிவு செய்கிறாரே' என்று புலம்பினார்கள். ஆனால் அதே ராஜீவின் ஆக்கிரமிப்பு - ஆதிக்க - விரிவாக்க முயற்சிகளை மட்டும் எவ்வளவு தூரம் தாழ்ந்துபோய் ஆதரிக்கிறார்கள்!

இந்திய இராணுவத்தை விலக்கிக் கொள்ளும்படி பிரேமதாசாவின் கோரிக்கை வந்த அடுத்த நாளே, ''வரவேற்கத்தக்க படைவிலக்கம்'' என்று தலைப்பிட்டு தலையங்கம் எழுதியது இந்தியன் எக்ஸ்பிரஸ். 'அதிபர் பிரேமதாசா கோருவதில் தவறானதோ திடீரென்ற முடிவோ எதுவும்




அமைதியான மாட்டுக்கு ஆத்திரமூட்டுவதா என்பதாக - தி டெலிகிராஃப்

இல்லை. அவர் பதவியேற்றதும்
கனவே கோடிகாட்டியது தான்
கம். இப்போது பிரேமதாசா
ருப்பதானது சில பார்வையா
ரிப்பதுபோல திடுதிடுப்பென்று
நவம்பரில் சார்க் மாநாடு கூட
ளது; சுயமரியாதையுடைய எ
சமயத்தில் அந்நிய ராணுவம் த
இருப்பதை ஏற்க முடியாது -
கெடுவைத் தீர்மானிப்பதற்கா
ணத்தைத் தைரியமாகவே
ஒரு அரசியல்வாதிக்குரிய மு
அவர் அறிவித்தார்; இலங்
றைய நிலைமைகளில் அது அர
பெற்று விட்டது. பிரேமதா
நாட்டு நிர்பந்தங்கள் மட்டும
இராணுவத்தை இலங்கையிலி
மான விரைவில் விலக்கிக்கொ
யாவுக்கும் நல்லதுதான். செமந்
ழர் - முஸ்லீம்களிடையான க
றவை மீண்டும் நடக்கலாம். இ
உள்நாட்டு சக்திகளிடையேயா
ளில் அதிக அளவு அமைதிப்ப
படலாம். அதைத் தவிர்க்கவு
படை பணி ஏறக்குறைய முடி
லும் படைவிலக்கம் அவசிய
திய - இலங்கை ஒப்பந்தம் எ
றது என்பதன் மீதான் சச்சர
னில்லை. அபாயமான சிக்கலி
துக்காரனாக அமைதிப்படை
கூடாது' என்று சாராம்சமாக
தலையங்கம் இருந்தது.

அப்போது படைவில
ராஜீவ் முடிவெடுத்திருக்கவில்
தாசா வைத்துள்ள கெடுவுக்கு
கம் சாத்தியமில்லை எ
தொடங்கி பல காரணங்களை
கிரமிப்பு நீடிக்கும் என்பதை ரா
தார். அவ்வளவுதான்! ராஜீவி
எனப்படும் இந்தியன் எக்ஸ்பி
சோரி ''திடீர்பல்டி'' அடித்தா
லான பாதை'' என்ற தலை
னார். பிரேமதாசா, ராஜீவ் இரு
வாத அணுகுமுறையை மேற்
ஒப்புக்குக் குறை கூறியபோது
நிலைப்பாட்டை ஆதரித்து எழு

'தூதரக முறை வழியா
படை விலக்கத்திற்கான பி
முன்வைப்பதற்குப் பதில்
பொதுக்கூட்டப் பேச்சுமூலம்

முதலாவதாக விவேகமான
றம் வெளிப்படையான சர்ச்
ராஜீவ் விவகாரத்தை மோசம்
சமாதான ஒப்பந்தக் கூட்ட
சாதுர்யமாகத் தீர்க்க வேண்டு
லக்கம் போன்ற விவகாரங்
ஆத்திரத்தைத் தூண்டும் வகை
கமாக பிரேமதாசா கோரின
தோல்வியில் தள்ளக்கூடிய அ
இம்மாதிரியான - ஆபத்தா
காரணம் உள்நாட்டு விவகார
கண்களைக் குருடாக்கி விட்டு
டையானதுதான். முற்றி வெ
திரியான விவரங்களில் பரந்த
லான அனுபவமுள்ள நாடு
பொருத்தமாக ஆரம்பத்தில்
மையாகவே கையாண்டது.'


...ண்டே இருப்பதன் மூலம் வடகி
...ழர் நம்பிக்கையைப் பெறும் முக்
...பிரச்சினையை அவர் திசை திருப்
...டியாது என்பதை பிரேமதாசா
...ண்டும். புலிகளின் பலம் வாய்ந்த
...ணம் உட்பட ஈழத்திலே வரதராஜ
... பெருந்திரளாக மக்களைத்
...டை விலக்கத்தை எதிர்த்து வருகி
...பூர்வ - நியாயபூர்வ தமிழர் தலை
...பலியிட்டு புலிகளுடன் கள்ளக்
...ர்வதன் மூலம் பிளவைத் தடுக்க
...தியை நிலைநாட்டவும் முடியும்
...ரேமதாசா கருதினால் அது தவறான
...அதிபுத்திசாலி அருண்சோரியின்
...றும் 17ந்தேதி தலையங்கங்களை
... பாருங்கள், முரண்பாடுகள் -
...' புரியும். அமைதிப்படை விலக்
...திராகத் தமிழ் மக்கள் திரளுகிறார்
...தே மிகப்பெரிய பித்தலாட்டம்.
...எக்ஸ்பிரஸ் நிருபர் ரிட்டா செபஸ்
... செய்திகள், தினமணியின் தலை
...ளே இதற்கான ஆதாரமாக உள்
...ந்தபோதும் இந்தியன் எக்ஸ்பிரஸ்
...சோரி என்ற 'உண்மை விளம்பி
...ருகின்றனர்.

...டர்ந்து ஜூன் 22, 26 தேதிகளில்
...லையங்கங்கள் எழுதியுள்ளனர்.
...லும், "ஜே.வி.பி.யுடனான உள்
...சண்டையில் ஈடுபட்டுள்ள பிரேம
... அதைச் சமாளிப்பதற்காக இந்திய
... நிலைப்பாடு எடுக்கிறார். ஐக்கிய
...சபைக்கும், சர்வதேச நீதிமன்றத்துக்
...வதாகவும், கெடுவைத்துப் படைவி
...கோருவதும் பிரேமதாசாவின் அரச
...சங்கங்கள்தான். மூர்க்கத்தனமும்
...வாதமும் இணைந்த நாட்டுப்புற அர
...தி பிரேமதாசா. படைவிலக்கம்
... இருதரப்பும் பேசிமுடிசெய்வதை
...ற்கான காரணம் எதையும் கூறமறுக்
...ஜே.வி.பியுடன் மட்டுமல்லாது கட்
...ரும் காமினி திசநாயகா, தொண்ட
...போன்ற ஜெயவர்த்தனே ஆதரவாளர்
...ும் ஏற்பட்டுள்ள மோதல் காரண

எதிர்ப்புக் கூச்சல் போடுகிறார். புலிகளை நம்பி அதனுடன் கூடிக் குலாவிக்கொண்டு மற்ற ஈழப்போராளி அமைப்புகளின் கதி, ஈழத்தில் ரத்தக்களறி ஏற்படும் அபாயம் ஆகியவற்றைப் பார்க்கத் தவறுகிறார்' என்று பாசிச ராஜீவ் கும்பலின் அதே வாதங்களை வைக்கிறது அதன் பரம எதிரியான இந்தியன் எக்ஸ்பிரஸ் - அருண்சோரி கூட்டம்.

## நடுநிலை ஏடுகளின் நயவஞ்சகம்: தேசிய வெறிக்குத் தூபம்!

இந்திய ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே நடக்கும் சண்டையில் நடுநிலை, நாட்டு நலன்கள் என்று வேடம் போடும் 'இந்தியா டுடே' போன்ற ஏடுகளும் கூட பாசிச ராஜீவ் கும்பலின் ஆக்கிரமிப்பு - ஆதிக்க - விரிவாக்க நடவடிக்கைகளை ஆதரிக்கின்றன. கடைசியாக வந்த 'இந்தியா டுடே' ஏடு 'படைவிலக்கம் பற்றிய சங்கடமான நிலை' என்றொரு தலையங்கம் எழுதியுள்ளது. அதிலே பிரேமதாசா, ராஜீவ் ஆகிய இருவருமே இந்த அரசுதந்திரச் சிக்கலை சாதுர்யமாகப் பேசி தீர்க்கத் தவறி விட்டதாக தொடங்குகிறது. பல காரணங்களுக்காக ராஜீவ் ஏற்கனவே படை விலக்கத்தைத் தொடங்கிவிட்டார். ஆனால் உள்நாட்டு நெருக்கடி காரணமாக குறுக்கு வழியிலே பாய்ந்து, காரியசித்தமாக இல்லாது பீதியை கிளப்பிவிடும் வகையிலே படைவிலக்கத்திற்குக் கெடுவைத்து விட்டார் பிரேமதாசா. அரசு தந்திரம் மற்றும் இராணுவ ரீதியில் அவமானம் நேரும் வகையிலே, அதுவும் தேர்தல் நெருங்கும் சமயத்தில் படைவிலக்கத்துக்கு ராஜீவ் ஒப்புக்கொள்ள முடியாது. அப்படியே செய்தாலும் போட்டிப்போராளி குழுக்களுக்கிடையே சண்டை மூண்டு ரத்தக்களறி ஏற்படும். எனவே படிப்படியான படை விலக்கத்துக்கு ஒப்புக் கொள்ளும் அதே சமயம் அமைதிப்படை உருவாக்கி வரும் தமிழ் போலீசுப்படைக்குப் பயிற்சியும் அதிகாரமும் அளிக்கும்படி இலங்கை அரசின் கையை முறுக்கி மிரட்டிப் பணிய வைக்கவேண்டும்' என்று பகிரங்கமாகவே எழுதுகிறது.




'அமைதிப் படை'யைக் கண்டு அலறும் பிரேமதாசா - தி வீக்

ரையில், "மக்கள் தொண்டர்படை திரட்டிப் பயிற்சியும் ஆயுதங்களும் கொடுக்கிறது இந்திய இராணுவம்; படை விலக்கம் செய்ய நேருமானால் அப்படையிடம் போதிய அளவு ஆயுதங்களை கொடுத்துவிட்டு வரவும் முடிவு செய்துள்ளது. இன்னும் கூடுதலான இராணுவத்தை அனுப்பி புலிகளை அழிக்கவும் முயலக்கூடும். இலங்கை அரசும் புலிகளுக்கு ஆயுதங்களைத் தருகிறது. எவ்வாறாயினும் முந்தைய ரத்தக் களறியையும் மிஞ்சிவிடும் அளவு மீண்டும் சண்டை நடக்கும்" என்று தனது கணிப்பை எழுதுகிறது 'இந்தியா டுடே'. ஆகவே, இந்தியாவின் ஆக்கிரமிப்பு, ஆதிக்க, விரிவாக்க சதிநடவடிக்கைகளை அறிந்தே தூக்கிப் பிடிக்கிறது.

ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தின் "சிற்பி" என்று கூறப்படும் போலிக் கம்யூனிஸ்டுகளின் முன்னாள் சகபாடி ராமின் இந்து ஏடு பாசிச ராஜீவ் கும்பலுக்கு வக்காலத்து வாங்குவதில் வியப்பேதுமில்லை. எப்படியானாலும் அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று ராஜீவை விட பிடிவாதமாக எழுதுகிறது. "இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு எதிராக தமிழ், சிங்கள, முஸ்லீம் தீவிரவாதிகள் ஒன்று சேர்ந்துள்ளனர். அமைதிப்படைக்கு எதிரான ஆத்திரம் - வெறிதான் பிரேமதாசாவையும் புலிகளையும் இணைக்கிறது. ஏனெனில் அமைதிப்படைதான் ஒப்பந்தத்தின் முக்கிய கருவியாக உள்ளது. இலங்கையின் நலன்களுக்கு எதிராகவும், அதன் எந்தப் பிராந்தியத்தின் மீதும் இந்தியாவுக்கும் அமைதிப் படைக்கும் எவ்வித சதிநோக்கமும் கிடையாது. இலங்கையின் ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் காப்பதற்காக உயிரும் - பொருளுமாக இந்தியா எவ்வளவோ தியாகம் செய்துள்ளது. ஆனால் பிரேமதாசாவின் செயல்பாடுகள் தேசிய வெறியாகவும், விவாதங்கள், சமரசம், ஒத்த கருத்தை உருவாக்கு என்கிற பெயரில் பயங்கரவாதிகளிடம் சரணடைவதாகவும் உள்ளது."

"இதுவரை இந்த விவகாரம் முழுவதையும் மிகச் சரியாகவே இந்திய அரசு கையாண்டு வருகிறது. இந்திய இராணுவத்தின் மதிப்பு, மரியாதை, நல்லபெயர், உணர்வுகள் ஆகியவை உட்பட இந்தியாவின் தேசிய பாதுகாப்பு மற்றும் நியாயமான அயலுறவுக் கொள்கைகளை கவனத்தில் கொண்டு பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். இந்திய இராணுவத்தை ஈடுபடுத்தியதே தவறானது என்று சில எதிர்க்கட்சியினர் கூறுவது விபரீதமானது; இலங்கையின் பயங்கரவாதிகளும், இனவெறியர்களும் கை கோர்த்துக் கொண்டு அமைதிப்படை மீது பழிபோட்டுப் பந்தாடவோ அதை அவமதிக்கவோ அனுமதிக்கவோ கூடாது" என்று ஜூன் 10, ஜூன் 19ந் தேதிகளில் தலையங்கம் எழுதியது இந்து.

## அடிவருடி ஏட்டின் அப்பட்டமான தேசியவெறி - போர் மிரட்டல்.

ராஜீவின் எதிரிகள், நடுநிலையாளர்கள் என்று கூறும் இவர்களே ஆக்கிரமிப்பு, ஆதிக்க, விரிவாக்க நோக்கங்களை ஆதரிக்கும்போது ராஜீவின் எடுபிடி ஏடுகளைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். இந்த வகையிலே முன்னணியில் நிற்பது கூலி எழுத்தா




சிங்கள இனவெறியிடம் சிக்கிக் கொண்டுள்ள பிரேமதாசா - தி இந்து

ளா அக்பரை ஆசிரியராகக் கொண்ட காங்கிரசு எம்.பி.யின் கல்கத்தா ஏடு 'தி டெலிகிராஃப்'. ''பிரேமதாசாவுடன் பேசிவிட்டு அரசு விமானத்தின் மூலம் காடுகளில் உள்ள பதுங்குமிடங்களுக்குப் புலிகள் திரும்பியதை அவருடைய நாட்டைக் காப்பதற்காக ரத்தம் சிந்திய இந்திய இராணுவம் அதிகமாகும் கோபத்தோடு கவனித்தது. மற்றவர்களைப் போலவே ராஜீவைக் குறைத்து மதிப்பிடுகிறார், பிரேமதாசா. எப்போதும் தயாராய் உள்ள தனது ஆயுதத்தைப் பிரயோகித்துள்ளது புதுடில்லி. இவ்வளவு அப்பட்டமாக பிரேமதாசா மாறும்போது, ராஜீவ் தான் யாரென்பதைக் காட்டுவதற்கு வெகுநேரம் ஆகாது. இந்தியர்களை வெளியேற்றினால் தனி ஈழத்தைப் பிரகடனம் செய்வோம் என்று வரதராஜப் பெருமாள் அறிவித்ததே பிரேமதாசாவை சுயநினைவுக்குக் கொண்டு வந்திருக்கும். ஜெயவர்த்தனேவுக்கு மகிழ்ச்சியூட்டுவதற்காக இந்திய இராணுவம் அனுப்பப்படவில்லை என்பதை பிரேமதாசா மறந்து விட்டார். இந்தியாவின் நலன்களும் கூட சம்பந்தப்பட்டிருக்கிறது. தமிழர்களைக் காப்பதோடு, இந்தியாவுக்குப் பகையான சக்திகள் இலங்கையைப் பயன்படுத்துவதை முறியடிக்கவும் தான் போயுள்ளது. பலவீனமாய் இருந்தும் மிகவும் அலட்டிக் கொள்கிறார் பிரேமதாசா. ஜூலைக்குள் இந்திய இராணுவம் நிச்சயம் வெளியேறாது. புலிகளோடு சேர்ந்து தாக்குதல் தொடுத்து அதை விரட்டி விட எண்ணுவாரானால் அது பேரழிவைத் தரும். தற்போதைய மோதலை டெல்லி வரவேற்கவில்லை; பிரேமதாசாவே சிக்கலில் மாட்டிக்கொண்டார்; தப்பித்துக் கொள்ளும் வழியை அவர்தான் தேடிக் கொள்ளவேண்டும்'' என்று மிரட்டி எச்சரிக்கை விடுக்கிறது, 'தி டெலிகிராஃப்' ஜூன் 8 தலையங்கம்.

''இந்தியப்படை விலக்கம் கோருவதன் மூலம் இந்தப் பிராந்தியத்தின் இந்திய எதிர்ப்புக் குரலாக மாறி, இந்தியாவின் தலையீடு இல்லாமல் உள்நாட்டு கலகக்காரர்களுடன் சமாதானமாகிவிட பார்க்கிறார், அதிபர் பிரேமதாசா. ஆனால் விவகாரத்தில் இந்தியா நேரடியாக பங்கேற்ற பிறகு அதன் ஒப்புதலின்றி எதுவும் செய்ய முடியாது. பிரேமதாசா விரும்பியபடியெல்லாம் பணயம் வைப்பதற்காக விலைமதிப்பற்ற 1500 உயிர்களை இந்தியா பலிகொடுக்கவில்லை. கொழும்பு நம்பிக்கைக்குரிய முறையில் நடந்து கொள்ளாதபோது, இந்தியா மட்டும் அதன் நலனுக்காக பாடுபட வேண்டிய காரணம் எதுவும் இல்லை. எனவே, நாசவேலை

பயன்படுத்துவது நியாயமானதுதான். அத்தற்காகத்தான் இப்போது ''டெலோ'' அமைப்பிற்கு பயிற்சியும் ஆயுதங்களும் தருகிறது. புலிகளுக்கு அடுத்து பலம்வாய்ந்த ''டெலோ''வினர் சிங்களர்களையும் புலிகளையும் மகிழ்ச்சியோடு எதிர்த்துப் போரிடுவார்கள். வடக்கிலே ஒரு கட்டுப்பாடான இந்திய இராணுமும், அதற்கு ஆதரவாக பிரிவினை கோரும் ஒரு கலக சக்தியும் சேர்வது மரண அடிகொடுக்கும் ஆயுதமாக இருக்கும். இலங்கையின் ஐக்கியத்தைப் பாதுகாக்கப் போன இராணுவம் ஒரு தமிழ் ஈழத்தை உருவாக்குவதாக முடிவது உச்சகட்டமான முரணாக இருக்கும். சைப்பிரஸ் பாணியிலே இந்தியாவின் ஆதிக்கத்திலுள்ள ஒரு காப்பரசை ஈழத்தில் நிறுவுவதைவிட இது குறைவானதுதான். ஆனால் அதற்கான பொறுப்பாளி பிரேமதாசா தான் என்று பகிரங்கமாகவே உள்ளது ஜூன் 'தி டெலிகிராஃப்' தலையங்கம்.

இதற்கு மேலேயும் போகிறது 'இவ்வளவு பராக்கிரமம் மிக்க அமைதிப்படையைத் துரத்தும்படி தன்னிச்சையாக முடிவு செய்தது அறிவீனமானது. இலங்கையை பிளவுபடுத்துவது இந்தியாவுக்குக் கடினமான வேலையே இல்லை. இந்தியா தூண்டி விடாமலேயே அதன் சுயவிருப்பமாக இது நடக்கும். தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழர் அரசாங்கத்தை பிரேமதாசா நீக்கினாலும் அமைதிப்படையின் ஆதரவோடு அது வேலையைத் தொடரும். அப்போது பிரேமதாசாவுக்கு மும்மடங்கு சங்கடமாகிவிடும்' என்று மேலும் இரு தலையங்கங்களில் 'டெலிகிராஃப்' எழுதுகிறது. அதாவது இலங்கையைத் துண்டாடித் தனது பொம்மை அரசை நிறுவி ஆதிக்க - ஆக்கிரமிப்பு தொடரும் என்று பகிரங்கமாகவே இலங்கை அரசை மிரட்டுகிறார்கள்.

★ ☆ ★

தேசிய - ஆங்கில ஏடுகள் இந்திய ஆதிக்க, ஆக்கிரமிப்பு, விரிவாக்க நடவடிக்கைகளை ஆதரிக்கும் அதே சமயம், எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா அல்லது கருணாநிதி கும்பல்களின் பிழைப்புவாத அரசியலுக்குத் துணையாக மாறிமாறி பாசிச ராஜீவ் கும்பலுக்கு விசுவாசமாக நடந்து கொள்ளுகின்றன. 'தமிழ் இன' ஏடுகள். ஜெயவர்த்தனே விரித்த தந்திர வலையில் ராஜீவ் சிக்கிக் கொண்டார் என்று தான் எழுதினவேயொழிய இந்திய அரசின் ஆக்கிரமிப்பு, ஆதிக்க, விரிவாக்க நோக்கங்களை இவை அனைத்துமே மறைத்தன.

ராஜீவின் அடிவருடி ஏடுகளும், அரசியல் பிழைப்புவாத சார்பு ஏடுகளும் இப்படிச் செய்வது புரிந்து கொள்ளக்கூடியதுதான்.

ஆனால் உள்நாட்டில் ராஜீவ் கும்பலின் லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள், ஜனநாயக விரோதப் போக்குகளை எதிர்க்கக் கூறும் 'எதிர்த்தரப்பு மற்றும் நடுநிலை' ஏடுகளும் கூட ஆக்கிரமிப்பு, ஆதிக்க விரிவாக்கக் கொள்கைகளை ஆதரிப்பதன் மூலம் பாசிசத்துக்குத் துணை போகின்றன. தேசிய வெறி பாசிசம் செழித்து வளருவதற்கான வளமான தளம் அமைத்துக் கொடுக்கிறது.

◆